

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நேற்று (27.2.2026) நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள செல்லும் வழியில், நிர்மலா மகளிர் கல்லூரியின் மாணவியர்கள் தமிழ்நாடு அரசின் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மடிக்கணினிகளுடன், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு நன்றி தெரிவித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (27.02.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் சார்பில் ரூ.27.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து. திட்டம் செயலாக்கம் குறித்த மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டனர், இந்நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திருமதி பர்வீஸ், தலைமை பொறியாளர் ராதாகிருஷ்ணன், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் வெ.பரிமளம், எம்.இசட். ஆசாத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்: காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# மார்ச் மாதம் முழுவதும் நலஉதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*காஞ்சிபுரம், பிப்,28,*

*கழகத் தலைவர்முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 1 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் இனிப்பு , அறுசுவை உணவு வழங்கி ஏழை எளிய மக்களுக்கு நல உதவிகள் வழங்குவதோடு, மரக்கன்று நடுதல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என்று எழுச்சியுடன் கொண்டாடுவோம் என்றும் மார்ச் 1 ஆம் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து மகிழ்வோம் என்றும் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தந்தை தெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் திராவிட இயக்கத்தின் வழித் தோன்றலாக திகழ்ந்து தமிழ் நாட்டை, தமிழ் மொழியை, தமிழ் மக்களை உலக அளவில் பெருமைப் பெறச் செய்தனர்.*

*இவ் மூவரின் வழித் தோன்றலாக, இம் மூவரின் உருவமாக நம்முன் இருப்பவர் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மட்டுமே.*

**திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்!**



*இன்றைக்கு திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவராகத் திகழ்ந்து, இந்தியாவிற்கே வழி காட்டும் முதல்வராக திகழ்ந்து, இந்தியாவிற்கு வழி காட்டும் நல் திட்டங்களை, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்து வரும் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மார்ச் 1 ஆம் தேதி 73 வது பிறந்த நாள் ஆகும்.*

*நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநகரங்களில் உள்ள பகுதி வட்டங்கள் தோறும், ஒன்றியங்கள் தோறும், நகரங்கள் தோறும், பேரூர் தோறும் என்று மட்டுமின்றி வட்டங்கள், வார்டுகள், கிளைகள், குக்கிராமங்கள் வரையில் கொண்டு சென்று மக்களிடம் சேர்த்து தி.மு.கழகத்தை ஏழாவது முறையாக அரியணை ஏற்றிடவும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் என்று கூறி இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுபேற்கவும் நாம் உறுதிமொழி ஏற்று தேர்தல் களப் பணியில் அனைவரும் ஈடுபடு வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*அது மட்டுமின்றி மார்ச் 1 ஆம் தேதி அன்று காலை நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநகரம் முதல் கிளைக் கழகங்கள் வரையில் ஆங்காங்கே உள்ள கழகக் கொடிக் கம்பங்களில் கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு, சர்க்கரைப் பொங்கல் வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடி வேண்டும். அன்று காலை ஆதரவற்றோர், அனாதை இல்லங்களில் காலை உணவு வழங்கிடவும், பிற்பகல் அறுசுவை உணவை வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

**கழகத் தலைவர் புகழ் பாடுவோம்**

*மேலும் மார்ச் 1 அன்று தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழ் ஓங்கிடும் வகையில் முழக்கங்களை எழுப்பிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

**குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!**

*காஞ்சிபுரம் மற்றும் மதுராந்தகத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவ மனைகளில் மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அ ணி வி க் க ப் ப டு கி ற து . இனிப்பு,அறுசுவை உணவு வழங்கி ஏழை எளியோருக்கு நல உதவிகள், மரக்கன்று வழங்குதல், மரக்கன்று நடுதல், மருத்துவ முகாம், இரத்ததானம் அளித்தல் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என்று இந்தச் சமுதாய மக்கள் நலன் பெறும் வகையில் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்திடுவது வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். நமது ஒப்பற்றத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்.*

*மேலும் கழகத் தலைவர் அவர்கள் பிறந்த இந்த மார்ச் மாதம் முழுவதும் தெருமுனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், என்று ஏற்பாடு செய்து கழகத் தலைவர் பிறந்த நாளை பார் போற்றிடும் வகையில் வடிவமைத்து செயல்படுத்துவதோடு, இக் கூட்டங்களில் தேர்தல் பிரச்சாரத்தினையும் மனதில் கொண்டு கழகப் பேச்சாளர்கள் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் - பரப்புரை!

## பெண்களின் உரிமைகளை உறுதி செய்த திராவிட மாடல் அரசு

சென்னை, பிப்.28–

சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கழக மகளிரணி சார்பில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் தேர்தல் பரப்புரையானது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் அனைத்து வீடுகளுக்கும் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள் நேரடியாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பரப்புரை செய்து வருகின்றனர்.

இன்றைய பரப்புரையின் போது திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மட்டுமல்லாது, பெண்களின் சம வாய்ப்பு, சம உரிமைக்கும் , முன்னேற்றத்திற்கும் திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளையும் பட்டியலிட்டு விளக்கினர் ஸ்டாலினின் மகளிர் படையினர்.

அரசுப்பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 40% ஆக அதிகரிக்கப்பட்டது. உள்ளாட்சியில் பெண்களுக்



கான 50% இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தியது, பெண்கள் வாங்கும் பத்துலட்சம் வரையிலான சொத்துக்கு 1% பத்திரப்பதிவு கட்டணவிலக்கு, பெண் ஓதுவார்கள் நியமனம் என பல் வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு மகளிருக்கான அரசியல் அதிகாரத்தையும், நியாயமான உரிமைகளையும் உறுதி செய்துள்ளது திராவிட மாடல் அரசு என்பதை ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்து சென்று சேரக்கப்பட்டது.

உள்ளாட்சியில் பெண்களுக்கான 50% இட ஒதுக்கீட்டினை அமல்படுத்தியதன் மூலம் 11 பெண்கள் முதன்முறையாக அரசியல் அதிகாரமிக்க மேயர் பதிவியைப் பெற்றுள்ளனர். அதேபோல கவுன்சிலர்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கான அரசியல் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சென்னையின் முதல் பெண் மேயரான திருமதி.பிரியா ராஜன் அவர்கள் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பரப்புரை செய்தார். அதேபோல காஞ்சிபுரம் மேயர் திருமதி. மகாலட்சுமி அவர்களும் ஒவ்வொரு வீடாக சென்று ஆதரவு திரட்டினார். வீட்டு மகளிர்களோடு இயல்பாக அமர்ந்தும் , அவர்களின் வேலைகளை பகிர்ந்து கொண்டும் பரப்புரை மேற்கொண்டனர் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், துறைமுகம் மேற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா 19, சான்றோர் போற்றும் தலைமகன் சரித்திரம் புகழும் தமிழ் மகன்! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில், அமைச்சர் எஸ்.ரகுபதி, கல்யாண மாலை மீரா நாகராஜன், துணைப் பொதுச்செயலாளர் திராவிடர் கழகம் வழக்கறிஞர் செ.மெ.மதிவதினி ஆகியோர் உரையாற்றினர். இதில் இக்கூட்டத்தில் எஸ். இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜகுமார், ஜி.மகாதேவன், பி.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத் எம்.சி, என்.பி.எம்.சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம்கனி, பா.ஜெகதிஷ், பி.விஜயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 26.2.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின், அலுவல்சாரா உறுப்பினர்கள் ஏ.தாஜ்தீன், என்.ஜே.போஸ், பி.அந்தோணி ஸ்டாலின், ஏ.ஜோஸ், வி.செல்வபாரதி, ஆர்.வி.கணேஷ், ஏ.பி.பன்னீர்செல்வம், எம்.முருகன், லெனின், கோ.மனோகரன், எம். ஜெபமாலை பர்னாந்து, பி.ஜேசுராஜா, பி.எஸ்.ஜேசுராஜ் மற்றும் தமிழ்நாடு பாரம்பரிய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 26.2.2026 அன்று தலைமைச் செயலகத்தில், 5ஆம் வகுப்பு மாணவன் யோகேஸ்வரன் சந்தித்து, நீலகிரி வரையாடுகளைப் பற்றி தான் எழுதிய "அப்போது நான் வரையாடாக இருந்தேன்" – என்ற புத்தகத்தை வழங்கியபோது, முதலமைச்சர் அவர்கள் அம்மாணவனுக்கு அய்யன் திருவள்ளுவர் சிலையினை வழங்கி, வாழ்த்தினார். உடன், அம்மாணவனின் பெற்றோர் சுரேஷ்வரன், திருமதி நிவேதிதா ஆகியோர் உள்ளனர்.




# தி.மு.க. இளைஞர் அணி




**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று (28.02.2026) சென்னையில் நடைபெறும் அரசின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார். அதன் விவரம் வருமாறு :

**28.02.2026 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 9.45 மணி | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு விழா | கொய்யாத்தோப்பு, புதுப்பேட்டை. |
| காலை 10.15 மணி | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு விழா | காக்ஸ் குடியிருப்பு, சிந்தாதிரிப்பேட்டை. |
| காலை 10.45 மணி | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு விழா | நாவலர் நெடுஞ்செழியன் நகர், சிந்தாதிரிப்பேட்டை. |
| காலை 11.00 மணி | மகளிர் சுயஉதவிக்குழு 'மகிழ் கஃபே' திறப்பு விழா | மே தினப் பூங்கா, சிந்தாதிரிப்பேட்டை. |
| காலை 11.30 மணி | 100 படுக்கைகள் மற்றும் நவீன அறுவை சிகிச்சை அரங்குகளுடன்கூடிய தாய் சேய் நல கட்டடம் திறப்பு விழா | அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி. |
| மாலை 5.00 மணி | மாநில திட்டக்குழுவின் அனுபவக் கற்றல் மையம் திறப்பு விழா | வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம். |
| மாலை 5.30 மணி | 'சென்னை நடுநிலைப்பள்ளி'க்கான புதிய கட்டடம் திறப்பு விழா | ராமா தெரு, நுங்கம்பாக்கம். |
| மாலை 6.00 மணி | புற்றுநோய் பகுப்பாய்வு மையம் திறப்பு விழா | நூர் வீராச்சாமி தெரு, நுங்கம்பாக்கம். |
| மாலை 6.30 மணி | அறிஞர் அண்ணா திருமண மாளிகை திறப்பு விழா | வெள்ளாளர் தெரு, கோடம்பாக்கம். |
| இரவு 7.00 மணி | 'சென்னை நடுநிலைப்பள்ளி'யின் புதிய கட்டடம் திறப்பு விழா | அமைந்தகரை, அண்ணா நகர், சென்னை. |
| இரவு 7.30 மணி | கலைஞர் நூற்றாண்டு சமூகநீதிப் பூங்கா திறப்புவிழா | அண்ணா அறிவாலயம் அருகில், தேனாம்பேட்டை, சென்னை. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 27.02.2026

கலைஞர் 100 1924 - 2023

